**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.**
**அ.வ.எண்.120/2017**
**நாள்.18.12.2023**

2023ம் ஆண்டு டிசம்பர் 18ஆம் தேதி பிச்சை என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு. R. பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==================================================================

| | |
|---|---|
| பெயர் = பிச்சை | தகப்பனார் பெயர்= வீரகவுண்டர் |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = 72 |

==================================================================

**DW 1 மு.வி**

நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

22.02.1934 தேதியிட்ட தாவா சொத்தை பொருத்த கிரைய ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.1, தாவா சொத்தை பொருத்த புகைப்படங்கள் பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3, மேற்படி புகைப்படங்களை பொருத்த சிடி பி.வா.சா.ஆ.4, 12.04.2017 தேதியிட்ட நான் காவல் உதவி ஆய்வாளரிடம் கொடுத்த புகார் மனு உண்மை நகல் பி.வா.சா.ஆ.5, மேற்படி புகாரை காவல் உதவி ஆய்வாளர் பெற்றுக்கொண்டதற்கான ரசீது அசல் பி.வா.சா.ஆ.6,

09.08.2017 தேதியிட்ட கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(பி.வா.சா.ஆ.1 – பி.வா.சா.ஆ.7 வரையுள்ள ஆவணங்கள் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கானது ஒத்தி வைக்கப்படுகிறது.)